2009 பிப்ரவரி 23] [திரு. துரைமுருகன்]

குன்றுகளுக்கு இடையில். அங்கே நில ஆர்ஜிதம் நடைபெற்ற காரணத்தால் அங்கிருக்கின்ற மக்கள் அதுகுறித்து எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள். எனவே, அந்தப் பணியும் நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே, பாலாற்றிலே அணை கட்டுகின்ற வேலையோ, அதையொட்டி மேல் பகுதியிலே மலைக் குன்று பகுதியிலே ஒரு கால்வாய் வெட்டுவதற்காக ஆந்திர அரசு எடுத்த முயற்சியோ நடைபெறவில்லை என்று நம்முடைய அதிகாரிகள் நேரில் சென்று ஆய்வு செய்து அறிக்கை தந்திருக்கிறார்கள். 3–3–2009 அன்று மீண்டும் வழக்கு உச்ச நீதிமன்றத்தில் வருகிறது. அப்போது விசாரணைக்கு வரும், மற்ற விவரங்கள் அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் எடுத்துவைக்கப்படும். (குறுக்கீடுகள்)

(ஆ) சென்னை, மதுரவாயல் பி.எம்.ஆர். பொறியியல் கல்லூரி மாணவர்கள் அடிப்படை வசதிகள் கோரிப் போராட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கடைசியில் கேட்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கேட்கிறேன் என்கிறேன் அல்லவா? உட்காருங்கள். சென்னை, மதுரவாயல் பி.எம்.ஆர். பொறியியல் கல்லூரி மாணவர்கள், அடிப்படை வசதிகள் கேட்டு வகுப்புகளைப் புறக்கணித்து, தொடர் போராட்டம் நடத்தி வருவது குறித்து, பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. கே. மகேந்திரன், திரு. சி. கோவிந்தசாமி, திரு. ப. டில்லி பாபு, திருமதி ரா. லீமா றோஸ் ஆகியோர் விதி 55–இன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்துச் சுருக்கமாக, கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி.எம்.ஆர். பொறியியல் கல்லூரியில் கடந்த சில நாட்களாக, தொடர்ந்து மாணவர்கள், தங்கள் கல்லூரியில் அடிப்படை வசதிகள் இல்லை; போதுமான பேராசிரியர்கள் இல்லை; அதனால் தங்களுடைய படிப்பு பாதிக்கப்படுகிறது என்கிற கோரிக்கையை முன்வைத்து வகுப்புகளைப் புறக்கணித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இதில் அரசு தலையிட்டு அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து

கொடுப்பதற்கு, அந்த நிருவாகத்திற்கு அறிவுரை வழங்கியோ அல்லது அந்த மாணவர்களுடைய நிலைக்கு ஏற்ப, ஏற்கெனவே கடந்த காலங்களில் செய்திருப்பதுபோன்று வேறு கல்லூரிகளுக்கு அந்த மாணவர்களை மாற்றுவதற்கோ அரசு முயற்சிக்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன்.

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மதுரவாயல் அருகில் இருக்கக்கூடிய, பி.எம்.ஆர். பொறியியல் கல்லூரியில் கடந்த 10 தினங்களுக்கு மேலாக, அங்கே பயிலக்கூடிய மாணவர்களெல்லாம், கல்லூரியில் அடிப்படை வசதிகள் மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், அடிப்படை வசதிகளை மேம்படுத்தக் கோரி ஒரு போராட்டத்தைத் தொடர்ந்து 10 தினங்களாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள். போராடக்கூடிய மாணவர்களை, அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தர் அவர்களும், உயர் அதிகாரிகளும் சந்தித்து, உடனடியாக அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பது சிரமம் என்கின்ற காரணத்தினால் வேறு கல்லூரிகளுக்கு உடனடியாக மாணவர்களை மாற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். தொடர்ந்து அந்த நடவடிக்கைகள் நடைபெறாத காரணத்தால், மாணவர்கள் போராட்டம் என்பது நடைபெறுகிறது. பி.எம்.ஆர். பொறியியல் கல்லூரியினுடைய நிருவாகிகள், போராடக்கூடிய மாணவர்களை ** மிரட்டுவதாகத் தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்காமல் இருக்கக்கூடிய பி.எம்.ஆர். பொறியியல் கல்லூரியில் பயிலக்கூடிய மாணவர்களுக்கு, வேறு கல்லூரியில் உடனடியாக இடம் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையைத்தான் இப்போது அவர்கள் வலியுறுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், அடிப்படை வசதிகளை அந்தக் கல்வி நிறுவனத்தில் செய்து கொடுக்கமுடியுமா என்றால் நிச்சயமாகச் செய்து கொடுக்க முடியாது. இரண்டு மூன்று மாதங்களில் தேர்வுகள் வரக்கூடிய காரணத்தால், உடனடியாக அந்த மாணவர்களையெல்லாம் வேறு கல்லூரிகளுக்கு மாற்றிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2009 பிப்ரவரி 23] [திரு. கே. மகேந்திரன்]

முற்பகல் 11–00

அண்ணா பல்கலைக்கழகத்தின்மூலமாக நடைபெறக்கூடிய counselling மூலமாகத்தான் மாணவர்கள் கல்லூரிகளிலே சேர்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி மாணவர்கள், பல்வேறு பொறியியல் கல்லூரிகளிலே சேர்க்கப்படும்போது, அந்தப் பொறியியல் கல்லூரிகளில் போதுமான கட்டமைப்பு வசதிகள்கூட இல்லாத நிலைமை நீடிக்கிறது என்றால், பல ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து படிக்கக்கூடிய மாணவர்களுக்குத் தரமான கல்வி கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே, பி.எம்.ஆர். பொறியியல் கல்லூரி உட்பட தமிழகத்தில் அடிப்படை கட்டுமான வசதிகள் இல்லாமல் செயல்படக்கூடிய பொறியியல் கல்லூரிகள்மீது நடவடிக்கை எடுப்பதற்கும் அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **உறுப்பினர் சொன்ன அந்த வார்த்தைகளை நிருவாகம் மிரட்டுவதாக என்று திருத்திக்கொள்ள வேண்டும். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, அந்தக் கல்லூரி கிட்டத்தட்ட 10 ஆண்டுக் காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற கல்லூரி. சென்ற ஆண்டு அவர்களே மற்றொரு கல்லூரி துவக்கியிருக்கிறார்கள். அதிலே 1,478 மாணவர்களும், மற்றொரு கல்லூரியிலே 205 மாணவர்களும் பயின்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுத்திருக்கிற அனுமதியை மறுபரிசீலனை செய்வதற்காக அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய குழு அங்கே அனுப்பப்பட்டது. அனுப்பப்பட்ட குழுவினர் அவர்களே பல குறைகளைக் கண்டுபிடித்து, குறிப்பாக ஆசிரியர்கள், பள்ளிக்கூடத்திலே இருக்கிற ஆசிரியர்கள் எல்லாம் அங்கே வேலை செய்வதாகக் கணக்கு காண்பித்திருக்கிறார்கள். அவர்கள் ஒரு I.T. நிறுவனமும் வைத்திருக்கிறார்கள். அதிலே இருப்பவர்களும் இங்கே ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருப்பதாகவும் காண்பித்திருக்கிறார்கள். இந்தக் குறைகளை எல்லாம் மேற்பார்வையிடச் சென்ற பல்கலைக்கழகத்தினுடைய குழு கண்டுபிடித்து, உடனடியாக அவற்றைச் சரிசெய்யாவிட்டால், அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அனுமதி இரத்து செய்யப்படும் என்ற எச்சரிக்கையையும் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அவர்கள் நேரடியாகத் துணை வேந்தரைப் பார்த்திருக்கிறார்கள். நானும் துணை வேந்தரை அழைத்துப் பேசினேன். அவரும் இந்த மாதம் 25 ஆம் தேதி வரை கால அவகாசம் கொடுத்திருக்கிறார். அதற்குள்ளாகப் பேராசிரியர்கள் நியமனம், மற்றப் பணிகளை எல்லாம் செய்து கொடுப்பதாக அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். உறுதியளித்திருக்கிற காரணத்தினால், அந்தத் தேதிவரை பார்க்கலாம். அதற்குள் மாணவர்களும் சில பேர் என்னை வந்து சந்தித்தார்கள். அவர்களும் தங்களை வேறு கல்லூரிகளுக்கு மாற்றம் செய்து கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். உங்கள் அனைவருக்குமே தெரியும், குறைந்தது 50 பேர், 60 பேர் என்றால் மாற்றுவது எளிது. இதில் 1,400, 1,600 மாணவர்கள் படிக்கிறார்கள். ஆகவே, நான் அவர்களிடம் சொன்னது எந்தத் தனியார் கல்லூரிகளிலாவது – நிறைய தனியார் கல்லூரிகளிலே இடம் இருக்கிறது—உங்களுக்கு சௌகரியமாக இருக்கிற தனியார் கல்லூரிகளிலே சேருவதற்கு நீங்களே no objection கேளுங்கள். கேட்டு, நீங்கள் சொன்னால், நாங்கள் அதற்கு ஏற்பாடு செய்கிறோம். எந்தக் கல்லூரியில் இடம் இருக்குமானாலும் அங்கே சேருவதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன் என்றும் சொல்லி இருக்கிறேன். ஆகவே அப்படிப்பட்ட மாணவர்கள் வேறு ஏதேனும் தனியார் கல்லூரிகளிலே சேர விரும்பினால் அவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு, No Objection கொடுத்தால்—இடம் இருந்தால் எல்லோரும் கொடுத்துவிடுவார்கள்—No Objection கொடுப்பார்கள் என்று சொன்னால், உங்களைச் சேர்ப்பதற்கு ஏற்பாடுகளை இந்த அரசு கண்டிப்பாகச் செய்யும் என்ற உறுதியையும் கொடுத்திருக்கிறோம். இப்போது அந்தக் கல்லூரி திறக்கப்பட்டு ஓரளவுக்கு அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தொடர்ந்து இதிலே அரசு கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது. அரசைப் பொறுத்தவரையில்—மற்றக் கல்லூரிகளைப் பற்றிச் சொன்னார்கள். உங்கள் அனைவருக்கும் தெரிந்ததுதான். இந்த A.I.C.T.E.–லே அனுமதி கொடுக்கிறபோது, மாநிலத்தினுடைய No Objection ஒன்று பெற வேண்டும் என்று பல முறை நாங்கள் வற்புறுத்தி இருக்கிறோம். சமீபத்திலேகூட சொல்லியிருக்கிறோம். ஆனால் இதுவரை அவர்கள் அதை எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆகவே அரசு இதிலே தலையிட முடியாவிட்டாலும், பல்கலைக்கழகங்களின்மூலமாக சில கட்டுப்பாடுகளைச் செய்வதற்கு இந்த அரசு உரிய முயற்சியை மேற்கொண்டிருக்கிறது.